பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**07 04 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** கேரளம், புதுச்சேரி, அஸ்ஸாம் சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று முடிவடைந்தது.

**2.** மகளிருக்கான அதிகாரத்தை உறுதி செய்ய உயர் முன்னுரிமை அளிக்கப்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**3.** ஆப்பிரிக்க நாடுகள் உடனான வர்த்தகம், முதலீடு மற்றும் கடனுதவி குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று ஆலோசனை நடத்தினார்.

**4.** சீக்கிய குரு **Tegh Bahadur-**ரின் பிறந்தநாளையொட்டி குடியரசு துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

**5.** ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ராஜஸ்தான் - மும்பை அணிகளுக்கு இடையிலான போட்டி மழை காரணமாக தாமதமாகியுள்ளது.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

கேரளம், புதுச்சேரி, அஸ்ஸாம் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று முடிவடைந்தது.

பொதுக்கூட்டம், பேரணி மற்றும் மின்னணு ஊடகங்கள் மூலமாகவோ, சமூக ஊடகங்கள் மூலமாகவோ பிரச்சாரம் மேற்கொள்வது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த காலக்கட்டத்தில் கருத்துக் கணிப்புகள் வெளியிடுவதற்கும் தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

வாக்குப்பதிவு தொடர்பாக மறைமுகமாக எந்தவொரு கணக்கெடுப்பும் மேற்கொள்வதையும் தேர்தல் ஆணையம் தடை செய்துள்ளது.

கேரளத்தில் 140 தொகுதிகளுக்கும், அஸ்ஸாமில் 126 தொகுதிகளுக்கும், புதுச்சேரியில் 30 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வரும் 9-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

<<<<<<<>>>>>>

மகளிருக்கான அதிகாரத்தை உறுதி செய்வதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி எழுதிய மகளிர் தலைமையிலான அரசு நிர்வாகம் என்ற தலைப்பிலான கட்டுரையை பாராட்டி பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாடாளுமன்றத்திலும், சட்டப்பேரவைகளிலும் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிப்பதற்கான சட்டம் மகளிர் தலைமையிலான அரசை நோக்கி நாடு செல்வதை வெளிப்படுத்துவதாக தெரிவித்துள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் மகளிரின் பங்கு மகத்தானது என்றும் அவர் கூறியுள்ளார்.

மகளிருக்கான பிரதிநிதித்துவத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருமதி அன்னபூர்ணா தேவி எழுதியுள்ள கட்டுரை மகளிரின் முன்னேற்றத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

இந்திய — ஆப்பிரிக்க உறவுகளுக்கான ஆலோசனைக்குழு கூட்டம் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

ஆப்பிரிக்க நாடுகள் உடனான வர்த்தகம், முதலீடு மற்றும் அந்நாடுகளுக்கான கடனுதவி, மானியம் உள்ளிட்டவை குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

கல்வி, திறன் மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் மண்டல அளவிலான ஒத்துழைப்பு உள்ளிட்டவை குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்குபின் இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள டாக்டர் ஜெய்சங்கர், இந்தியாவுக்கும், ஆப்பிரிக்காவும் இடையிலான நீண்டகால உறவுகள் குறித்தும், மக்களுக்கு இடையிலான தொடர்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

அமெரிக்காவின் கரீபியன் தீவுப்பகுதியில் அமைந்துள்ள **St. Kitts — Nevis** நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் **Denzil L. Douglas,** வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மருத்துவத்துறையில் ஒத்துழைப்பு, மின்னணு தொழில்நுட்பம், பேரிடர் மீட்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் இருநாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

உற்பத்தியோடு இணைந்த சலுகைத் திட்டம், உணவுப் பதப்படுத்துதல் துறையில், முதலீடுகளை அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த உணவுப் பதப்படுத்துதல் அமைச்சகத்தின் இணைச்செயலர் திரு பிரவீன், 7 ஆயிரம் கோடி ரூபாய் என்ற இலக்குடன் செயல்பட்டு வந்த உணவு பதப்படுத்தும் துறையில் 9 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக முதலீடுகள் பெறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த துறையில் செயல்பட்டுவரும் நிறுவனங்கள் கூடுதல் முதலீடுகளுடன் உற்பத்தியை அதிகரித்திருப்பதாக அவர் கூறினார்.

உற்பத்தியுடன் இணைந்த சலுகைத் திட்டத்தின்கீழ், 7 புள்ளி நான்கு ஒன்று சதவீதமாக இருந்த உற்பத்தி, பத்து புள்ளி ஐந்து எட்டு சதவீதமாக உயர்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஆண்டுக்கு 34 லட்சம் டன் உற்பத்தி என்ற திறனை இந்த தொழில் நிறுவனங்கள் எட்டியிருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த 2021-22-ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த திட்டத்தின்மூலம், இந்திய பொருட்களின் ஏற்றுமதியும் கணிசமாக அதிகரித்துள்ளதாகவும் திரு பிரவீன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

தில்லியில் அங்கீகாரம் பெறாத குடியிருப்புப் பகுதிகள் தற்போதுள்ள நிலையிலேயே முறைப்படுத்தப்படும் என்று மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தாவுடன் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ், தற்போதுள்ள கட்டுமானங்கள் அங்கீகரிக்கப்படும் என்றும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்

அனைத்து கட்டுமானங்களும் மாநகராட்சி விதிமுறைகளின்படியே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறினார்.

முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ், பொதுமக்கள் தங்கள் வீடுகளை பதிவு செய்ய ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றும் திரு மனோகர்லால் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

மேற்காசிய பகுதிகளில் பணியாற்றிவரும் அனைத்து இந்திய மாலுமிகளும் பாதுகாப்பாக உள்ளதாக கப்பல் போக்குவரத்துத் துறை கூடுதல் செயலர் திரு **Mukesh Mangal** தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த **24** மணிநேரத்தில் இந்திய படகுகள் மீது எவ்வித தாக்குதலும் நடைபெறவில்லை என்று தெரிவித்தார்.

தற்போது மேற்கு-பெர்சிய வளைகுடா மண்டலத்தில் **16** இந்திய கப்பல்கள் தங்கியுள்ளதாகவும், அதில் உள்ள **433** மாலுமிகளும் பாதுகாப்பாக உள்ளனர் என்றும் அவர் கூறினார்.

கப்பல் போக்குவரத்து தலைமை இயக்குனகரம் தொடர்ந்து மேற்காசிய பகுதிகளில் உள்ள கப்பல்களை கண்காணித்து வருவதாகவும் திரு **Mukesh Mangal** தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

சீக்கிய குரு **Tegh Bahadur**-ரின் பிறந்தநாளான **Parkash purab**-ஐ ஒட்டி குடியரசு துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் அவருக்கு மரியாதை செலுத்தினார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில், குரு **Tegh Bahadur**-ன் போதனைகள் சமூகத்தில் நீதி நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டின் ஆன்மிக கலாச்சார பாரம்பரியத்தின் குரு **Tegh Bahadur** முக்கிய பங்கு வகித்ததாக தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள செய்தியில், நாட்டின் கலாச்சாரத்தை பாதுகாப்பதற்கு குரு **Tegh Bahadur** ஆற்றிய தியாகத்தை நினைவு கூர்வதாக கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் திமுக அரசு பெண்களுக்கான நலத்திட்டங்களையும், கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மாநிலம் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் செல்ல தங்கள் கூட்டணி வேட்பாளர்களுக்கு வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் ஊழல் மற்றும் முறைகேடான ஆட்சி நிர்வாகம் காரணமாக திரிணமுல் காங்கிரஸ் ஆட்சி விரைவில் முடிவுக்கு வரும் என்று பிஜேபி மூத்த தலைவர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

பாரக்பூரில் இன்று தேர்தல் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், 15 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்துவரும் செல்வி மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமுல் காங்கிரஸ் அரசு ஊடுருவலை தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்டதாக குற்றம் சாட்டினார்.

இம்மாநிலத்தில் பிஜேபி ஆட்சி அமைக்க வாய்ப்பு அளிக்கப்பட்டால் தொழில் வளர்ச்சி பெருகி, வேலைவாய்ப்பு அதிகரிக்கும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழ் புத்தாண்டு மற்றும் விஷு புத்தாண்டை முன்னிட்டு, பயணியர் நெரிசலை சமாளிக்கும் வகையில், வரும் 9-ஆம் தேதி இரவு மணி 11.40-க்கு திருநெல்வேலிருந்து, சென்னை எழும்பூருக்கு அதிவிரைவு சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

மறுமார்க்கத்தில் பத்தாம் தேதி நண்பகல் 12.30-க்கு சென்னை எழும்பூரிருந்து இந்த ரயில் புறப்படும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

கோடைக்கால பயணியர் நெரிசலை குறைக்கும் நோக்கில், கோவை -ஜெய்பூர் இடையே வாராந்திர சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன.

<<<<<<<>>>>>>

மணிப்பூரின் பிஷ்ணுபூர் மாவட்டத்தில் நேற்றிரவு குண்டுவெடித்ததில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்ததையடுத்து ஐந்து பள்ளத்தாக்கு மாவட்டங்களில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றிரவு பள்ளத்தாக்கு பகுதியில் அமைந்துள்ள **Tronglaobi** கிராமத்தில், சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில், சம்பவ இடத்திலேயே இரண்டு குழந்தைகள் உயிரிழந்தனர்.

அவர்களின் தாய் இம்பாலில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

குவஹாத்தியில் இன்று நடைபெறவுள்ள இப்போட்டி மழை காரணமாக தாமதமாகியுள்ளது.

-----------

ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Jaismine** இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளார்.

மங்கோலியாவின் **Ulaanbaatar**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 57 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 3-2 என்ற புள்ளிக்கணக்கில், உஸ்பெகிஸ்தானின **Nigina Uktamova**-வை வென்றார்.

ஆடவர் **50** கிலோ எடைப்பிரிவில், **Viswanath Suresh 5-0** என்ற புள்ளிக்கணக்கில், ஜோர்டானின் **Huthaifa Eshish-**ஐ வென்றார்.

------------

ஆசியா ஒசியானா பாரா வலுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Jaspreet Kaur** வெண்கலப்பதக்கம் வென்றார்.

**<<<<<<<END>>>>>>**